பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 03 2024 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 102 தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது.

2. பிஜேபி மீண்டும் ஆட்சியமைத்தால் இந்தியா விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உயரும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் வேலையில்லா பிரச்சினைக்குத் தீர்வு காண பிஜேபி தவறிவிட்டதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

4. மியான்மர் நாட்டின் இந்திய தூதராக திரு. அபய் தாக்கூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. மியாமி ஓபன் டென்னிஸ் அரை இறுதிக்கு ரோஹன் போபன்னா – மேத்யூ எப்டன் இணை முன்னேறியுள்ளது.

<u>*------ இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

நாட்டில் 17 மாநிலங்களில் வரும் 19ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன்பிரதேசங்களில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 102 தொகுதிகளிலும் இன்று மாலையுடன் வேட்புமனு தாக்கல் முடிவுக்கு வருகிறது.

தமிழ்நாட்டில் 39 இடங்களுக்கும், ராஜஸ்தானில் 12 இடங்கள், உத்தரப்பிரதேசத்தில் 8, மத்தியப்பிரதேசத்தில் 6, உத்தராகண்டில் 5, அசாம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 5 இடங்கள், பீகாரில் 4, மேற்குவங்கத்தில் 3, அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர், மேகாலயா ஆகிய இடங்களில் தலா 2 இடங்களுக்கும் வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது.

சத்தீஸ்கர், மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, அந்தமான் நிகோபார், ஜம்மு-கஷ்மீர், லட்சத்தீவு, புதுச்சேரி ஆகியவற்றில் தலா ஒரு இடத்திற்கும் வேட்புமனு தாக்கல் இன்றுடன் முடிவடைகிறது.

வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறும். மனுக்களை திரும்பப் பெற வரும் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் பீகார் மாநிலத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்திவு நடைபெறும் 89 தொகுதிகளுக்கு நாளை தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடப்பட உள்ளது.

<<<<>>>>

மத்தியில் பிஜேபி மீண்டும் ஆட்சியமைத்தால் இந்தியா விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உயரும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்குவதற்கு வர்த்தக தொழில்துறையினர் முக்கியப் பங்காற்றுவதாகக் குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சி பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

வேலையில்லா பிரச்சினைக்குத் தீர்வு காண பிஜேபி ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு. சந்தீப் தீக்ஷித் நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கொண்டுவந்த திட்டங்களால் போதிய வேலைவாய்ப்புகளை நாட்டில் உருவாக்க இயலவில்லை என்று கூறினார்.

நிலையான வேலை கிடைக்காததால் அதிக அளவிலான இளைஞர்கள் விவசாயத்திற்கு திரும்பியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2018-19ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி 3 கோடிக்கும் மேற்பட்டோர் விவசாயத்திற்கு திரும்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பின்மையின் சதவீதம் கணிசமாகக் குறைந்துள்ளதாக பிஜேபி அரசு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திரு. சந்தீப் தீக்‌ஷித் கூறினார்.

<<<<>>>>

இந்தியா – பிலிப்பைன்ஸ் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு பாதுகாப்புத்துறை செயலர் திரு. கில்பர்ட் டியோடரோவுடன் ஆலோசனை நடத்தினார்.

அரசுமுறைப் பயணமாக பிலிப்பைன்ஸ் சென்றுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் நடத்திய பேச்சுகளின்போது இந்தோ-பசிபிக் கடல்சார் பாதுகாப்பு குறித்தும், பிலிப்பைன்சின் இறையாண்மை மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையே ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்தி இருதரப்பிலும் பாதுகாப்பு திறனை வலுப்படுத்துவது மற்றும் பாதுகாப்பு உற்பத்தி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. **Bongbong Marcos**-ஐ சந்தித்த திரு. ஜெய்சங்கர், குடியரசுத்தலைவர் மற்றும் பிரதமர் சார்பில் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இருதரப்பு நல்லுறவுகளை வளர்ப்பதற்கு பிலிப்பைன்ஸ் அதிபரின் வழிகாட்டுதலை இந்தியா எதிர்நோக்கி இருப்பதாகவும், புதிய முயற்சிகளை மேற்கொள்ள இந்தியா ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தாம் அவரிடம் தெரிவித்ததாக சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

<<<<>>>>

தொடர்புத்துறை செயலர் ஆகியோரை சந்தித்துப் பேசியபின் தமது பிலிப்பைன்ஸ் பயணத்தை முடித்துக்கொண்டு திரு. ஜெய்சங்கர் புதுதில்லி திரும்பியுள்ளார்.

<<<<>>>>

மியான்மர் நாட்டின் இந்திய தூதராக திரு. அபய் தாக்கூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1992ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுப் பணியை சேர்ந்த மூத்த அதிகாரியான திரு. அபய் தாக்கூர் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் பல்வேறு நிலைகளில் பணியாற்றி உள்ளார்.

இந்தியா தலைமையேற்று நடத்திய ஜி-20 உச்சி மாநாட்டின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை திரு. அபய் தாக்கூர் சிறப்பாக மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

பல்கேரியாவுடன் பல்வேறு துறைகளில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள ஆர்வம் கொண்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

நேற்றிரவு பல்கேரிய பிரதமர் **Alexander Decroo**-வுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, வர்த்தகம், முதலீடு, குறைமின் கடத்திகள், மருந்துப்பொருட்கள், பாதுகாப்பு, துறைமுக மேம்பாடு ஆகியவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

பிரசல்ஸ் நகரில் முதல் அணுசக்தி மாநாட்டை சிறப்பாக நடத்தியதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடும் 5 வேட்பாளர்கள் கொண்ட 7வது பட்டியல் நேற்று வெளியிட்டது.

மயிலாடுதுறை தொகுதியில் ஆர். சுதா அக்கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் 4 தொகுதிகளுக்கான வேட்பாளர்களும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

ராமகிருஷ்ணா மடம் மற்றும் ராமகிருஷ்ணா மிஷன் அமைப்பின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஸ்மரானானந்தா நேற்று கொல்கத்தாவில் காலமானார்.

வயது முதிர்வு மற்றும் உடல்நல பிரச்சினைகள் காரணமாக அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

கொல்கத்தாவை அடுத்துள்ள பேலூர் மடத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

சுவாமி ஸ்மரானானந்தா மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

நாடாளுமன்றங்களுக்கு இடையிலான சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா சென்றுள்ள மாநிலங்களவை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, நேற்று அர்மேனியா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இருதரப்பு பேச்சுகள் நடத்தினர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டது.

பொருளாதார ஒத்துழைப்பு, தொழில்நுட்பம், வேளாண்மை, மருந்துப்பொருட்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்டவற்றில் இந்தியாவும் - அர்மேனியாவும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இரு நாட்டு நாடாளுமன்றங்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் இருதரப்பிலும் வழங்கப்பட்டது.

<<<<>>>>

தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி மாணவர்கள் முதல்முறை வாக்களிக்க உள்ளது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

<<<<>>>>

மியாமி ஓபன் டென்னிஸ் அரை இறுதிக்கு ரோஹன் போபன்னா – மேத்யூ எப்டன் இணை முன்னேறியுள்ளது.

நேற்றிரவு நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நெதர்லாந்தின் **Sem Verbeea –** ஆஸ்திரேலியாவின் ஜான் பேட்ரிக் ஸ்மித் இணையை 3-4, 7-5, 10-7 என்ற செட் கணக்கில் இந்திய-ஆஸ்திரேலிய இணை தோற்கடித்தது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி குஜராத் அணியை 63 ரன் வித்தியாசத்தில் வென்றது.

சென்னையில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் களமிறங்கிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 206 ரன் எடுத்தது.

ஷிவம் துபே 23 பந்துகளில் 51 ரன் எடுத்தார்.

அணியின் கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் ரச்சின் ரவீந்திரா தலா 46 ரன் எடுத்தனர்.

207 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 143 ரன் மட்டுமே எடுத்தது.

இன்றிரவு ஏழரை மணிக்கு ஹைதராபாதில் நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் - மும்பை அணிகள் மோதுகின்றன.

**<<<<The End>>>>**